## 50 சென்ட் … 60 நாள்… ரூ.60 ஆயிரம்…

## 25.09.2013





நூக்கலுடன் வெங்கடேசன்

### நிறைவான வருமானம் தரும் நூக்கல்!

உற்பத்தி செய்த பொருளை விற்பதற்கு அலைவதை விட தேவை அதிகம் உள்ள பொருளை உற்பத்தி செய்வதுதான், சிறந்த தொழிலதிபர் ஆவதற்கான சூத்திரம். இது விவசாயத்திற்கும் பொருந்தும். அந்த வகையில், ஓசூர், பெங்களூர் சந்தையில் அதிகத் தேவையுள்ள 'டர்னிப்' எனப்படும் நூக்கலை, (சில பகுதிகளில் 'நூல்கோல்' என்றம் நூக்கல் என்றும் அழைக்கிறார்கள்) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், கெலமங்கலம், பேரிகை, சூளகிரி ஆகிய பகுதிகளில் அதிகளவில் பயிரிட்டு, தொடர்ந்து லாபமீட்டி வருகிறார்கள்.. விவசாயிகள்.

பீட்ரூட், கேரட், காலிஃப்ளவர், முட்டைக்கோஸ்.. போன்ற இங்கலீஷ் காய்கறிகள் வரிசையில் நூக்கலும் ஒன்று. மிதமான குளிரும், வெப்பமும் இருக்கும் பகுதிகளில் வளரக்கூடிய இது, நல்ல வருமானம் தரக்கூடிய பயிராகவும் இருக்கிறது. கிருஷ்ணகிரி மாவட்ட பகுதிகளில் இது விளைவதற்கான சூழல் நிலவுவதால், அங்கு அதிகமாக விளைவிக்கப்படுகிறது.

இப்படி பல ஆண்டுகளாக நூக்கல் சாகுபடியில் ஈடுபட்டு வருபவர்களில், ஒருவரான வெங்கடேஸ் தோட்டம் டி.கொத்தப்பள்ளி கிராமத்தில்தான் இருக்கிறது. முன்னர், டெம்போ வைத்து ஓட்டிக்கொண்டிருந்தேன். சுற்று வட்டாரத்திலிருந்து தினமும் காய்கறிகளை ஏற்றிக்கொண்டு ஓசூர் மார்கெட்டிற்கு தினமும் சென்று வருவேன். கேரட், உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், பீட்ரூட் என்று காய்கறிகளுக்கு நல்ல தேவை இருந்தது. விவசாயிகள் 3 மாதத்தில் நல்ல காசு பார்க்க முடிந்தது. அதனால், எனக்கும் காய்கறி சாகுபடியில் ஆசை வந்தது. என்னுடைய நிலத்தில் காய்கறிகளை போட ஆரம்பித்தேன். ஆரம்பத்தில், பீட்ரூட், கேரட், முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு என்று போட்டேன். சந்தையில் 'டிமாண்ட்' உள்ள காயுடைய விதைகளைக் கொடுத்து, வியாபாரிகள் விதைக்கச் சொல்லுவார்கள். அப்படித்தான் என்னுடைய நிலத்தில் நூக்கல் போட ஆரம்பித்தேன். கர்நாடகா மாநிலத்திலிருந்து ஓசூர் பகுதிக்கு வந்த காய்கறிகளில் இதுவும் ஒன்று.

மொத்தம் 5 ஏக்கர் நிலமிருக்கு. அதில், கொஞ்ச நிலத்தில் நூக்கல் போட்டேன். என்னுடைய நிலத்தில் நன்றாகவே வந்தது. அதனால் வருடா வருடம் நூக்கல் போட ஆரம்பித்தேன். இந்த முறை 50 சென்டில் போட்டு, அறுவடை செய்துவிட்டேன். வழக்கமாக 60 நாளில் வருவது, இந்த முறை 45 நாட்களிலேயே மகசூலுக்கு வந்துவிட்டது என்றார். ஏக்கருக்கு 625 கிராம் விதை!

'நூக்கல் அனைத்துப் பகுதிகளிலும் வளரக்கூடியது. குறிப்பாக, பனிக்காலத்தில் நன்றாக விளையும். நாற்று நடவு, நேரடி விதைப்பு என இரண்டு முறைகளில் நடவு செய்யலாம். அதிகப்பரப்பில் சாகுபடி செய்ய வேண்டுமானால், நேரடி விதைப்புதான் ஏற்றது. சாகுபடி நிலத்தில் (அரை ஏக்கர்) இரண்டு டிராக்டர் தொழுவுரத்தைக் கொட்டி, இரண்டு சால் உழவு ஓட்ட வேண்டும். பிறகு, தானியங்களை விதைப்பது போல் நூக்கல் விதையை நிலத்தில் தூவிவிட வேண்டும் (ஒரு ஏக்கர் நிலத்திற்கு 625 கிராம் விதை தேவைப்படும்). விதைத்த பிறகு ஏர்கலப்பையிலோ, டிராக்டரிலோ நிலத்தை சமன் செய்து, பாசனம் செய்ய வசதியாக, பார் பாத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். நிலத்தின் அமைப்பைப் பொருத்து பாரின் அளவை அமைத்துக் கொள்ளலாம்.

### மேக மூட்டம் கவனம்!

நான்கு நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்ய வேண்டும். களைகள் வளர்வதைப் பொருத்து, விதைத்த 15 நாட்கள் முதல் 20 நாட்களுக்குள் அவற்றை அகற்ற வேண்டும். களை எடுக்கும் போதே, ஒவ்வொரு செடிக்கும் 3 அங்குலம் அல்லது 4 அங்குலம் இடைவெளி இருப்பது போல் (இடைவெளி இருந்தால்தான் காய் பெருக்கும்) அதிகப்படியான செடிகளை கொத்திவிட்டு, பரிந்துரைக்கப்படும் உரங்களைத் தேவையான அளவு கொடுக்க வேண்டும். 25 நாட்களுக்கு மேல் காய்கள் வர ஆரம்பிக்கும். மேக மூட்டம் இருக்கும் சமயத்தில், புழுக்கள், பூச்சிகளின் தொல்லை இருக்கும். அந்த சமயத்தில், பூச்சிவிரட்டிகளைத் தெளிக்க வேண்டும். அவ்வப்போது, மண்ணின் தன்மையைப் பொருத்து…பரிந்துரைக்கப்படும் நுண்ணூட்ட உரங்களைக் கொடுத்து வந்தால், கிழங்கின் எடை கூடும். நடவு செய்த 45 நாட்களுக்கு மேல் கிழங்குகள் பெருத்து, 60 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். செடிகளை வேரோடு பறித்து, வேர்களை முறுக்கி எடுக்க வேண்டும். மேற் பகுதியில் இருக்கும் தழைகளை ஒடித்துவிட்டு, அப்படியே மூட்டை பிடிக்கலாம். நன்றாக விளைந்திருந்தால், ஒரு கிழங்கு கால் கிலோ அளவு எடை இருக்கும்.

### 81 மூட்டை மகசூல்!

50 சென்டிலிருந்து 80 மூட்டைக்கு (80 கிலோ மூட்டை) குறையாமல் நூக்கல் மகசூல் கிடைக்கும். இந்த முறை எனக்கு 81 மூட்டை கிடைத்தது. பெங்களூர் சந்தைக்கு 40 மூட்டையை அனுப்பினேன். மூட்டை ஆயிரம் ரூபாய் என்று விலை கிடைத்தது. மீதியை, 500 ரூபாய் என்று ஓசூர் மார்க்கெட்டிலேயே போட்டுவிட்டேன். மொத்தம் 60 ஆயிரத்து 500 ரூபாய் வருமானம் கிடைத்தது. எல்லா செலவும் போக 49 ஆயிரம் ரூபாய் லாபமாக நின்றது. எவ்வளவு உற்பத்தியானாலும், ஒரு கிலோ நூக்கல் விலை, 6 ரூபாய்க்குக் கீழ் எப்பவும் குறைவதில்லை என்றார்.

| 50 செண்ட் நிலத்தில் நூக்கல் சாகுபடி செய்ய வெங்கடேசன் சொல்லும் செலவு – வரவு கணக்கு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| உழவு | 2,000 | |
| தொழுவுரம் | 4,000 | |
| விதை | 950 | |
| உரம் | 1,500 | |
| பூச்சிக்கொல்லி | 1,000 | |
| களை எடுக்க | 1,000 | |
| அறுவடை | 1,000 | |
| காய்விற்பனை மூலம் வரவு | | 60,500 |
| மொத்தம் | 11,450 | 60,500 |
| நிகர லாபம் | | 49,050 |

---

தொடர்புக்கு

**வெங்கடேசன், தொலைபேசி: 98430 67410**

**மகேஷ், தொலைபேசி :94431 41366**

*ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.09.13 www.vikatan.com*